

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: |
|---|
| |

பதிவு எண்: | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

**[Turn over]**



Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
|---|
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
### 7 ஆம் வகுப்பு – தொகுதி - 3

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. "பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். இன்னமும் விரிவாகச் சொல்ல வேண்டும் என்றால் திராவிட மொழிகள் தாம் இந்த மண்ணிலே முதன்முதலாகப் பேசப்பட்ட மொழிகள். அவற்றுள் மிகவும் இலக்கியச் செறிவுகொண்ட தமிழ்மொழி தான் மிகப் பழமையான மொழி. எனவே, தமிழ்மொழி நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்கவேண்டும்" – என்று குறிப்பிட்ட அரசியல் தலைவர் யார்?
   (A) மா.பொ. சி
   (B) டி.கே. சி
   (C) டாக்டர் மு.வ
   (D) காயிதே மில்லத்

2. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் முதல் திருவந்தாதி பாடியவர்
   (A) பொய்கையாழ்வார்
   (B) ஆண்டாள்
   (C) பூதத்தாழ்வார்
   (D) பேயாழ்வார்

3. சரியான இணைகளைக் கண்டறிக

| | | |
|---|---|---|
| 1. நெற்பயிர் | - | Paddy |
| 2. உழவியல் | - | Agronomy |
| 3. நீர்ப்பாசனம் | - | Irrigation |
| 4. நாட்டுப்புறவியல் | - | Folklore |

   (A) 1, 2, 3, 4 சரி
   (B) 1, 2, 3, சரி
   (C) 2, 3, 4 சரி
   (D) 1, 3, 4 சரி

4. இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
   வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
   அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் .... - இப்பாடல் வரிகளில் பயின்றுவந்த அணி யாது?
   (A) உவமையணி
   (B) இரட்டுற மொழிதலணி
   (C) ஏகதேச உருவகஅணி
   (D) உருவக அணி

5. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று பாடியவர்
   (A) பாரதியார்
   (B) பாரதிதாசன்
   (C) திருவள்ளுவர்
   (D) முனைப்பாடியார்

6. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி யாது?
   (A) சொற்பொருள் பின்வருநிலையணி
   (B) உவமையணி
   (C) ஏகதேச உருவக அணி
   (D) உருவக அணி

7. ‘ஒப்புரவு நெறி’ என்பதன் ஆங்கிலக் கலைச்சொல்லாக்கம் தருக.
   (A) Integrity
   (B) Astronomy
   (C) Preaching
   (D) Reciprocity

8. முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் யார்?
   (A) சே. பிருந்தா
   (B) கண்ணதாசன்
   (C) சுப்ரபாரதிமணியன்
   (D) தேனரசன்

9. ‘கண்ணியமிகு’ என்னும் அடைமொழியில் அழைக்கப்படுபவர் ...........
   (A) முத்துராமலிங்கர்
   (B) எம்.ஜி.ஆர்
   (C) மா.பொ. சி
   (D) காயிதே மில்லத்

10. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
   (A) 15
   (B) 16
   (C) 17
   (D) 13

11. திருநெல்வேலி ........... மன்னர்களோடு தொடர்புடையது
   (A) பாண்டிய
   (B) சோழ
   (C) பல்லவ
   (D) விஜயநகர

12. காளைக் கொம்பு முளைத்த குதிரை போலப் பாய்ந்தது - இச்சொற்றொடரில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) உவமையணி
   (B) எடுத்துக்காட்டு உவமையணி
   (C) இல்பொருள் உவமையணி
   (D) உருவக அணி

13. ஒரு பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது ----------------
   (A) சினையாகுபெயர்
   (B) பொருளாகுபெயர்
   (C) பண்பாகுபெயர்
   (D) இடவாகுபெயர்

14. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது - இது எவ்வகை ஆகுபெயர் ஆகும்?
   (A) சினையாகுபெயர்
   (B) தொழிலாகுபெயர்
   (C) காரியவாகுபெயர்
   (D) பொருளாகுபெயர்

15. வினைக்கு அடைமொழியாய் குறிப்புப் பொருளில் வருவது ...........
    (A) அடுக்குத் தொடர்
    (B) இரட்டைக் கிளவி
    (C) குறிப்பு வினையெச்சம்
    (D) வினைத்தொகை

16. காயிதே மில்லத் என்ற சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள். இச்சொல் எம்மொழிச் சொல் ஆகும்?
    (A) இலத்தீன்
    (B) கிரேக்கம்
    (C) எபிரேயம்
    (D) அரபு

17. காயிதேமில்லத் அவர்களை, "தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்" ........... என்று கூறியவர் யார்?
    (A) ஜவஹர்லால் நேரு
    (B) தந்தை பெரியார்
    (C) காமராசர்
    (D) அறிஞர் அண்ணா

18. சே. பிருந்தா எழுதிய நூல்களுள் பொருந்தாததைக் கண்டறிக.
    (A) கதை சொல்லும் கலை
    (B) வீடு முழுக்க வானம்
    (C) மழை பற்றிய பகிர்தல்கள்
    (D) மகளுக்குச்சொன்ன கதை

19. வறுமையை .......... என்றும் செல்வத்தை ............ என்று கூறுவது மரபு.
    (A) மருந்து, பிணி
    (B) பிணி, மருந்து
    (C) நோய், திரு
    (D) இன்மை, திரவியம்

20. இந்திய – சீனப்போர் நடைபெற்ற ஆண்டு ..........
    (A) 1963
    (B) 1962
    (C) 1965
    (D) 1961

21. நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்து இருந்தாலும் தமிழை கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் ...............
   (A) காயல் பட்டினம்
   (B) கொற்கை
   (C) சீவைகுண்டம்
   (D) திருநெல்வேலி

22. 'இரசிகமணி' என்று சிறப்பிக்கப்பட்டவர் யார்?
   (A) மா.பொ. சி
   (B) டி.கே. சி
   (C) நா. முத்துசாமி
   (D) கண்ணதாசன்

23. தொட்டனைத்து தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) எடுத்துக்காட்டு உவமையணி
   (B) உவமையணி
   (C) பிறிதுமொழிதலணி
   (D) ஏகதேச உருவக அணி

24. அறநெறிச்சாரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
   (A) 221
   (B) 223
   (C) 230
   (D) 225

25. வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
   வாழ்க்கை பாலைவனம் - அவர்
   தூய மனதில் வாழ நினைத்தால்
   எல்லாம் சோலைவனம் - இக்கவிதையின் ஆசிரியர்
   (A) கவிஞர் கண்ணதாசன்
   (B) கவிஞர் முத்தரையன்
   (C) கவிஞர் காசி ஆனந்தன்
   (D) கவிஞர் அறிவுமதி

26. மகளுக்குச் சொன்ன கதை - இந்நூலின் ஆசிரியர் யார்?
   (A) சுரேபாரதி மணியன்
   (B) பாவண்ணன்
   (C) ஈரோடு தமிழன்பன்
   (D) சே. பிருந்தா

27. “இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்” – என்று காயிதே மில்லத் அவர்களை குறிப்பிட்டவர் யார்?
   (A) அறிஞர் அண்ணா
   (B) தந்தை பெரியார்
   (C) அயோத்திதாசப் பண்டிதர்
   (D) காமராசர்

28. மல்லிகை சூடினாள் - இது எவ்வகை ஆகுபெயர்?
   (A) சினையாகுபெயர்
   (B) தொழிலாகு பெயர்
   (C) பண்பாகுபெயர்
   (D) பொருளாகுபெயர்

29. அருளோசை என்னும் இதழை நடத்தியவர் யார்?
   (A) குன்றக்குடி அடிகளார்
   (B) மா.பொ. சி
   (C) பாவண்ணன்
   (D) டி.கே. சி

30. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை - இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணி யாது?
   (A) உவமையணி
   (B) உருவகஅணி
   (C) எடுத்துக்காட்டு உவமையணி
   (D) ஏகதேச உருவக அணி

31. உவம உருபு அற்ற தொடரைக் கண்டறிக
   (A) மயிலொப்ப ஆடினாள் நர்மதா
   (B) புலிபோலப் பாய்ந்தான்
   (C) மலரன்ன பாதம்
   (D) கொம்பு முளைத்த குதிரை

32. தமது வீட்டில் ‘வட்டத்தொட்டி’ என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தவர்
   (A) மா.பொ. சிவஞானம்
   (B) டி.கே. சிதம்பரனார்
   (C) வ.உ. சிதம்பரனார்
   (D) பாரதிதாசன்

33. ‘தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு’ என்றழைக்கப்படும் நகரம் ...........
(A) திருச்செந்தூர்
(B) திருநெல்வேலி
(C) பாளையங்கோட்டை
(D) நாமக்கல்

34. வெகுளி, விரைவு, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்கள் காரணமாக வருவது .........
(A) வினைத்தொகை
(B) இரட்டைக்கிளவி
(C) முற்றெச்சம்
(D) அடுக்குத்தொடர்

35. முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் ..........
(A) அகநானூறு
(B) கலித்தொகை
(C) பதிற்றுப்பத்து
(D) நற்றிணை

36. இராதாபுரம், நாங்குநேரி, அம்பாசமுத்திரம், தென்காசி போன்ற பகுதிகளில் பெருமளவில் ........ பயிரிடப்படுகிறது.
(A) நெல்லி
(B) சோளம்
(C) கரும்பு
(D) வாழை

37. திங்கள் நாள்விழா மல்கு திருநெல்
வேலியுறை செல்வர் தாமே - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்
(A) திருவாசகம்
(B) நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்
(C) தேவாரம்
(D) திருப்பாவை

38. பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப் பாடல்களை மலை அருவி என்னும் நூலாகத் தொகுத்தவர் ............
(A) வானமாமலை
(B) கி. ராஜநாராயணன்
(C) கி.வா. ஜகந்நாதன்
(D) வ. கீதா

39. பழமொழி நானூறின் ஆசிரியரான முன்றுறை அரையனார் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?
   (A) கி.பி நான்காம் நூற்றாண்டு
   (B) கி.பி ஐந்தாம் நூற்றாண்டு
   (C) கி.பி ஆறாம் நூற்றாண்டு
   (D) கி.பி மூன்றாம் நூற்றாண்டு

40. ‘கொற்கையில் பெருந்துறை முத்து’ - இப்பாடல் வரி இடம்பெற்ற நூல் ............
   (A) நற்றிணை
   (B) குறுந்தொகை
   (C) ஐங்குறுநூறு
   (D) அகநானூறு

41. பொதியி லாயினும் இமய மாயினும்
   பதியெழு அறியாப் பழங்குடி - இப்பாடல் வரிகள் பாடியவர்...........
   (A) திருஞானசம்பந்தர்
   (B) இளங்கோவடிகள்
   (C) திருநாவுக்கரசர்
   (D) திரிக்கூடராசப்ப கவிராயர்

42. திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். இதனை ........ என்று முன்னர் அழைத்தனர்.
   (A) கடனாநதி
   (B) சிற்றாறு
   (C) தண்பொருநை
   (D) காரையாறு

43. திருநெல்வேலியின் சிறப்பை, ‘தண்பொருநைப் புனல் நாடு’ எனப் போற்றியவர் யார்?
   (A) திருஞான சம்பந்தர்
   (B) திருநாவுக்கரசர்
   (C) இளங்கோவடிகள்
   (D) சேக்கிழார்

44. குமரகுருபரர் பிறந்த ஊர் ..............
   (A) திருவைகுண்டம்
   (B) திருவாரூர்
   (C) திருச்சிராப்பள்ளி
   (D) திருப்பணந்தாள்

45. நெல்லை மாநகரில் அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடமாக இருந்தது .....

(A) காவற்புரைத் தெரு

(B) வடக்கன்குளம்

(C) கூழைக்கடைத் தெரு

(D) அக்க சாலை

46. ஏகதேசம் என்பதன் பொருள் ..........

(A) ஒரு பகுதி

(B) இரு பகுதி

(C) பலபகுதி

(D) இடைப்பகுதி

47. பின்வரும் நூல்களுள் பாவண்ணன் எழுதாத நூல் எது?

(A) வேர்கள் தொலைவில் இருக்கின்றன

(B) வெள்ளை ரோசா

(C) மீசைக்கார பூனை

(D) கடலோர வீடு

48. திசம்பர் சூடினாள் - இது எவ்வகை ஆகுபெயர்

(A) கால ஆகுபெயர்

(B) சினையாகு பெயர்

(C) பொருளாகு பெயர்

(D) பண்பாகு பெயர்

49. தவறான இணையைக் கண்டறிக.

(A) வெள்ளை அடித்தான் - பண்பாகு பெயர்

(B) பொங்கல் உண்டான் - பொருளாகு பெயர்

(C) இனிப்பு தின்றான் - பண்பாகு பெயர்

(D) அவியல் உண்டான் - தொழிலாகு பெயர்

50. சடுகுடு போட்டியில் தமிழ்நாடு வென்றது - இது எவ்வகை ஆகுபெயர்?

(A) பொருளாகு பெயர்

(B) பண்பாகு பெயர்

(C) இடவாகு பெயர்

(D) காலவாகு பெயர்

51. இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தவர் .........
   (A) சர்தார் வல்லபாய் படேல்
   (B) காயிதே மில்லத்
   (C) முத்துலட்சுமி ரெட்டி
   (D) டாக்டர் மு.வ

52. வீடு முழுக்க வானம் - இந்நூலின் ஆசிரியர் யார்?
   (A) வ. கீதா
   (B) சே. பிருந்தா
   (C) பாவண்ணன்
   (D) சுப்ரபாரதிமணியன்

53. ஓதும் பொருளாதாரம் தணிலும்
   உன்னத அறம்வேண்டும் - புவி
   உயர்வும் தாழ்வும் இல்லா தான
   வாழ்வினைப் பெறவேண்டும் - இக்கவிதையின் ஆசிரியர் யார்?
   (A) சே. பிருந்தா
   (B) வ. கீதா
   (C) பாவண்ணன்
   (D) கண்ணதாசன்

54. ஒரு செயலைச் செய்யும்போதே அதுதொடர்பாக மற்றொரு செயலையும் செய்து முடிக்க வேண்டும் என்பதை எது போன்றது என திருவள்ளுவர் கூறுகிறார்.
   (A) பசு, புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு மேய்வது போன்றது
   (B) யானையை வைத்து யானையைப் பிடிப்பது போன்றது
   (C) நீரில் மூழ்கிய ஒருவனை தீப்பந்தம் கொண்டு தேடுவது போல
   (D) அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல

55. அறிவு என்னும் விளக்கைக் கொண்டு அறியாமையை நீக்க வேண்டும் - இத்தொடரில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) பிறிதுமொழிதலணி
   (B) எடுத்துக்காட்டு உவமையணி
   (C) ஏகதேச உருவகஅணி
   (D) உருவக அணி

56. இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டுவிடுவது ......... அணியாகும்.
   (A) உருவக அணி
   (B) ஏகதேச உருவகஅணி
   (C) எடுத்துக்காட்டு உவமையணி
   (D) உவமையணி

57. ஜென் என்ற ............ மொழிச் சொல்லுக்கு தியானம் செய் என்பது பொருள்.
   (A) கிரேக்க
   (B) இலத்தீன்
   (C) சீன
   (D) ஜப்பானிய

58. அயலவர் உண்ணாது இருக்கும்போது நாம் மட்டும் உண்பது நெறியும் அன்று; முறையும் அன்று. அதுமட்டுமல்ல பாதுகாப்பும் அன்று. அயலவன் விழித்து எழுந்தால் நமது நிலை பாதிக்கும். ஆதலால் வாழ்வு அறநிலையைப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும். - இம்முறையை எடுத்துக்கூறியவர் யார்?
   (A) திருநாவுக்கரசர்
   (B) திருஞானசம்பந்தர்
   (C) மாணிக்கவாசகர்
   (D) சுந்தரர்

59. செல்வத்துப் பயனே ஈதல்
   துய்ப்பேம் எனினே தப்புந பலவே – என்ற புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர் ............
   (A) வெண்ணிக்குயத்தியார்
   (B) தேவகுலத்தார்
   (C) ஒக்கூர் மாசாத்தியார்
   (D) நக்கீரர்

60. இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
   வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?
   (A) அறநெறிச்சாரம்
   (B) மூதுரை
   (C) ஆசாரக்கோவை
   (D) புறநானூறு

61. பொய்கையாழ்வார் பிறந்த ஊர் ............

(A) திருக்குரகூர்
(B) மாமல்லபுரம்
(C) திருவெஃகா
(D) மதுரை

62. காயிதேமில்லத் அவர்கள் ......... முதல் ............ வரை சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்

(A) 1947 முதல் 1950 வரை
(B) 1947 முதல் 1952 வரை
(C) 1946 முதல் 1952 வரை
(D) 1946 முதல் 1950 வரை

63. உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன் - என்று பாடியவர்

(A) அழகிய சொக்கநாதர்
(B) அருணகிரிநாதர்
(C) நமச்சிவாயப் புலவர்
(D) மாணிக்கவாசகர்

64. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்

(A) தேவாரம்
(B) குற்றாலக் குறவஞ்சி
(C) சிலப்பதிகாரம்
(D) மருமக்கள் வழி மான்மியம்

65. "ஒன்றுறா முன்றிலோ இல்" - இவ்வரி இடம்பெற்ற நூல்

(A) பழமொழி நானூறு
(B) நாலடியார்
(C) ஆசாரக்கோவை
(D) மூதுரை

66. பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில்
நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன – என்று பாடியவர் யார்?

(A) அருணகிரிநாதர்
(B) அழகிய சொக்கநாதர்
(C) நமச்சிவாயர்
(D) பிள்ளைப் பெருமாள்

67. கவி இல்லாமலே மனசைக் கவரக்கூடிய இடம் ...............
   (A) கழுகுமலை
   (B) கருவை நல்லூர்
   (C) குற்றாலம்
   (D) திருச்செந்தூர்

68. குற்றாலத்தை, ‘நுண்துளி தூங்கும் குற்றாலம்’ என்று பாடியவர் யார்?
   (A) இளங்கோவடிகள்
   (B) அருணகிரிநாதர்
   (C) அப்பர்
   (D) திருஞானசம்பந்தர்

69. ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்று தேகுறி – மலை
   யாள ‘மின்னல் ஈழ மின்னன் சூழ மின்னுதே! - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் ..........
   (A) முக்கூடற்பள்ளு
   (B) முத்தொள்ளாயிரம்
   (C) பதிற்றுப்பத்தந்தாதி
   (D) குற்றாலக் குறவஞ்சி

70. குற்றால முனிவர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
   (A) திரிகூடராசப்ப கவிராயர்
   (B) டி.கே. சிதம்பரனார்
   (C) அழகிய சொக்கநாதர்
   (D) திருஞானசம்பந்தர்

71. பின்வரும் இதழ்களுள் குன்றக்குடி அடிகளார் நடத்திய இதழ் எது?
   (A) அறிக அறிவியல
   (B) தென்றல்
   (C) தமிழ்ச்சிட்டு
   (D) கொல்லிப்பாவை

72. வையம் தகளியா வார்கடலே நெய்யாக
   வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய - இப்பாடல் பயின்று வரும் அணி யாது?
   (A) உருவக அணி
   (B) ஏகதேச உருவக அணி
   (C) உவமையணி
   (D) பொருள் வேற்றுமையணி

73. தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு – தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு - இக்கவிதையின் ஆசிரியர் யார்?
(A) கண்ணதாசன்
(B) பாவண்ணன்
(C) சுப்ரபாரதிமணியன்
(D) ஈரோடு தமிழன்பன்

74. தனது ஒரே மகனைப் போர்முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்து அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதியவர் யார்?
(A) மா.பொ. சிவஞானம்
(B) டி.கே. சிதம்பரனார்
(C) காயிதேமில்லத்
(D) குன்றக்குடி அடிகளார்

75. ‘கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை’ என்ற முதுமொழிக்கு ஏற்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தவர்
(A) காயிதே மில்லத்
(B) மா.பொ. சி
(C) டி.கே. சி
(D) டாக்டர் மு.வ

76. கன்னட மொழியிலிருந்த பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
(A) சே. பிருந்தா
(B) பாவண்ணன்
(C) சுப்ரபாரதிமணியன்
(D) வ. கீதா

77. பொருந்தாததைக் கண்டறிக
(A) பிடி, பிடி, பிடி
(B) வா வா வா
(C) தா, தா, தா
(D) உதை உதை உதை

78. அடுக்குத் தொடரில் ஒரே சொல் .......... முறை அடுக்கிவரும்
(A) மூன்று
(B) ஆறு
(C) நான்கு
(D) இரண்டு

79. Doctrine இச்சொல்லின் தமிழ் கலைச்சொல் தருக.
(A) கண்ணியம்
(B) கொள்கை
(C) நேர்மை
(D) செயல்

80. மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ளமாட்டேன் என்று வெளிப்படையாகத் தெரிவித்தவர் ...........
(A) மா.பொ. சிவஞானம்
(B) விஜயலட்சுமி பண்டிட்
(C) டாக்டர் மு.வ.
(D) காயிதே மில்லத்

81. கூடு கட்டத் தெரியாத பறவை
(A) சிட்டுக்குருவி
(B) குயில்
(C) கரண்டிவாயன்
(D) காக்கை

82. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
......... ......... ............
- இக்குறட்பாவில் ஈற்றடியைத் தேர்வு செய்க.
(A) சேராது இயல்வது நாடு
(B) நாட வளம்தரு நாடு
(C) காடு உடையது அரண்
(D) இல்லார்கண் இல்லது அரண்

83. இடர் ஆழி நீங்குகவே - இத்தொடரில் அடிக்கோடிட்ட வார்த்தையின் பொருள் யாது?
(A) கடல்
(B) கப்பல்
(C) துன்பம்
(D) நீங்குதல்

84. அன்பையே அகல்விளக்காகவும் ஆர்வத்தையே நெய்யாகவும் இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் மனம் உருக திருமாலைப் பாடியவர் ...........
(A) பூதத்தாழ்வார்
(B) பேயாழ்வார்
(C) ஆண்டாள்
(D) பொய்கையாழ்வார்

வள்ளுவ நேயம் வளர்ப்போம் வையகம் மீட்போம்
சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை

85. பூமியை அகல்விளக்காகவும் ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும் வெப்பக்கதிர் வீசும் கதிரவனை சுடராகவும் இருக்கும் திருமாலுக்கு துன்பக்கடல் நீங்க பாமாலை சூட்டிய ஆழ்வார் யார்?
(A) பூதத்தாழ்வார்
(B) தொண்டரடி பொடியாழ்வார்
(C) பொய்கையாழ்வார்
(D) பேயாழ்வார்

86. சரியான இணைகளைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. தகளி | - | அகல்விளக்கு |
| 2. நாரணன் | - | சிவன் |
| 3. ஞானம் | - | அறிவு |
| 4. இடர் ஆழி | - | துன்பக்கடல் |

(A) 1, 2, 3, 4
(B) 1, 3, 4
(C) 1, 2, 4
(D) 1, 2, 3

87. அகத்தியர் வாழ்ந்த மலை ............
(A) இமயமலை
(B) திரிகூடமலை
(C) பொதியமலை
(D) திருப்பதி மலை

88. சரியான இணைகளைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. கழலுதல் | - | உதிர்தல் |
| 2. மடை | - | வயலுக்கு நீர் வரும் வழி |
| 3. குழி | - | நில அளவைப்பெயர் |
| 4. சாண் | - | நீட்டல் அளவைப்பெயர் |

(A) அனைத்தும்
(B) 1, 2, 3
(C) 1, 2, 4
(D) 1, 3, 4

89. பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள் - இப்பாடல் வரியில் அடிக்கோடிட்ட வார்த்தையின் பொருள் யாது?
(A) புகுதல்
(B) நல்லதாக
(C) உணவு
(D) அமதி

மனிதநேயம் வளர்ப்போம் மாநிலம் மீட்போம் சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை

90. திருநெல்வேலியை ‘திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி’ என்று பாடியவர்.........
(A) சேக்கிழார்
(B) அப்பர்
(C) திருஞானசம்பந்தர்
(D) மாணிக்கவாசகர்

91. திங்கள் நாள்விழா மல்கு திருநெல்
வேலியுறை செல்வர் தாமே – என்று பாடியவர் ..........
(A) மாணிக்கவாசகர்
(B) அருணகிரிநாதர்
(C) அப்பர்
(D) திருஞானசம்பந்தர்

92. மாலை வெயிலில் மழைத்தூறல் பொன்மழை பொழிந்ததுபோல் தோன்றியது. - இத்தொடரில் பயின்றுவந்துள்ள அணி யாது?
(A) இல்பொருள் உவமையணி
(B) எடுத்துக்காட்டு உவமையணி
(C) உருவக அணி
(D) ஏகதேச உருவகஅணி

93. மீசைக்கார பூனை - இந்நூலின் ஆசிரியர் யார்?
(A) பாவண்ணன்
(B) சே. பிருந்தா
(C) சுப்ரபாரதிமணியன்
(D) வ. கீதா

94. பாண்டியர்களின் இரண்டாவது தலைநகரம் ..........
(A) மதுரை
(B) கொற்கை
(C) திருநெல்வேலி
(D) பாளையங்கோட்டை

95. திருக்குறள் நெறியைப் பரப்புவதில் தன் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர் ........
(A) மா.பொ. சி
(B) குன்றக்குடி அடிகளார்
(C) டி.கே. சி
(D) அருணகிரிநாதர்

96. தவறான இணையைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| (A) மாரி | - | மழை |
| (B) புகவா | - | உணவாக |
| (C) நல்கினாள் | - | கொடுத்தாள் |
| (D) மடமகள் | - | மணமகள் |

97. காவடி சிந்து பாடியவர் .........
   (A) அருணகிரியார்
   (B) அழகிய சொக்கநாதர்
   (C) மாணிக்கவாசகர்
   (D) அண்ணாமலையார்

98. டி.கே.சி ......... தொழில் செய்து வந்தார்
   (A) உழவுத் தொழில்
   (B) டாக்டர் தொழில்
   (C) வழக்கறிஞர் தொழில்
   (D) கோவில் நிர்வாகம்

99. பூதத்தாழ்வார் பிறந்த ஊர் -------?
   (A) மாமல்லபுரம்
   (B) திருவெஃகா
   (C) திருமயிலை
   (D) காஞ்சிபுரம்

100. உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் இடையில் உவம உருபு மறைந்து வருவது ............... அணி
   (A) ஏகதேச உருவக அணி
   (B) பிறிது மொழிதலணி
   (C) எடுத்துக்காட்டு உவமையணி
   (D) உவமையணி

******